**சேருவில பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் சபையினால் ரூபா 7,653,261 ஆன கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், அது ரூபா 7,097,701 ஆக இறுதிக் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டமையால் ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிங்களின் பெறுமதி ரூபா 555,560 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,230,544 ஆன போதிலும், அது இறுதிக் கணக்குகளுக்கு ரூபா 1,097,508 ஆக எடுக்கப்பட்டிருந்தமையால் வருமானம் ரூபா 133,036 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 284,533 ஆக வங்கிக் கணக்கின் மீதி இறுதிக் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள 10 நிர்மாண ஒப்பந்தங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போது மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 1,982,371 ஆன தொகை ஐந்தொகையில் கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கடன் கொடுத்தோருக்கு ரூபா 350,438 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், நடப்பாண்டின் இறுதியில் அது செலுத்த வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கு தேவையான கணக்காய்வு சான்றுகள் இல்லாதிருந்தமை

**தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமை**

உரிய தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையால் ரூபா 608,336 தொகையான மூன்று ஒப்பந்தங்களின் பிடிகாசினை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை | |
| (i) 13 ஆம் விதி | உரிய வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாதீட்டு மதிப்பீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 59 ஆம் விதி | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் சபைக்குரிய அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பில் மதிப்பாய்வொன்று பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 143 ஆம் விதி | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள், பிடிகாசு, நூலக வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களுக்காக வெவ்வேறாக கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 217 ஆம் விதி | நிலையான வைப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கி 06 மாதங்களை கடந்திருந்த போதிலும், கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 695,470 பெறுமதியான 03 காசோலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 24 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,562,806 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தைவிஞ்சிய வருமானம் ரூபா 6,645,655 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையினால் பேணிச் செல்லப்படும் நடைமுறைக் கணக்கின் 2017 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ரூபா 08 மில்லியனும், ரூபா 19 மில்லியனுக்கும் இடைப்பட்ட அளவான மீதியொன்று நிலவியதுடன், இந்த மிகைப் பணம் ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்து வருமானமீட்டுதல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் ,சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்டவருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தநிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தநிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| வீதவரியும் வரியும் | - | - | - | - | 10 | 2.5 | 2.5 | - |
| வாடகை | 3,835 | 3,958 | 3,138 | 165 | 3,245 | 3,195 | 2,633 | 953 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 565 | 1,605 | 816 | - | 656 | 720 | 720 | - |
| ஏனைய வருமானம் | 7,186 | 16,069 | 12,538 | 2,269 | 4,326 | 10,200 | 9,332 | - |

### 2.3.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முத்திரைக் கட்டணங்களாக பெற்றுக்கொள்ள வேண்டிய தொகையை இனங்காணுவதற்கு மற்றும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

சபைக்கு சொந்தமான கடைகள் மற்றும் வாடி வீடுகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் பெற வேண்டிய வாடகை வருமானமான ரூபா 894,895 ஆன தொகை 2018 மே 17 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்தல், மக்களின் சுகவாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மாதாந்தம் 30 டொன்கள் அளவான கழிவுகள் அகற்றப்படுவதுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகளுக்கமைய

கழிவுகளை அகற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த பிரதேசத்தில் உலாவும் காட்டு விலங்குகள் உட்கொள்ளல் உள்ளடங்கலான பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியிருந்தன. காட்டு விலங்குகளுக்கு உருவாகியுள்ள அச்சுறுத்தலை அகற்றும் பொருட்டு பிரதேசத்தை சுற்றிலும் மின்சார வேலியொன்று பொருத்தப்பட்டு முறையாக குப்பைகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் 2018 மே 17 ஆந் திகதி வரையிலும் நடைமுறை செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அழிவு ஏற்படும் அரிசி ஆலைகள், தச்சு கைத்தொழில், கராஜ் மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான 33 முயற்சிகள் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாது தொழிற்சாலை நடாத்திச் செல்லப்பட்டவாறு இருந்தது. இது தொடர்பில் ஏற்படக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வேலைத்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் மாதம் முதல் வெற்றிடமாக காணப்படும் ஆயுர்வேத மருத்துவர் பதவிக்கு பொருத்தமான நபரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகர், மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வருமானப் பரிசோதகர் எனும் பதவிகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பிரதேச சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவ நிலையத்தின் புள்ளி விபரங்களுக்கமைய வருடமொன்றிற்கு சுமார் 1200 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டிருந்த போதிலும், இதில் சேவையாற்றிய ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் மற்றுமொரு இடத்திறகு இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையால் மருத்துவ நிலையம் 2014 யூன் மாதம் முதல் மூடப்பட்டிருந்தமையால் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள

மக்களுக்கு சேவை வழங்கி அவர்களின் சுகாதார மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் நிறைவேற்ற முடியாது போயிருந்தது. மேலும் ஆயுர்வேத மருத்துவ நிலையம் மூடப்பட்டமையால் அதிலுள்ள ரூபா 45,078 பெறுமதியான 22 மருந்துகளை பயன்படுத்த முடியாது போயிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணிகளில் சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 87,959,749 தொகை விளையாட்டுத் திடல்கள், பொதுக்கிணறு, சனசமூக மண்டபம், நீர்த்தாங்கிகள், தகன அறைகள் மற்றும் பொது வியாபார நிலையங்கள் போன்றன நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த காணிகள் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 675,000 பெறுமதியான டபள் கெப் வண்டியின் முற்புற வார் மற்றும் டயர் ஓட்டத்திற்கு பொருத்தமற்றிருந்தமையாலும், ரூபா 100,000 பெறுமதியான மஹேந்திரா கெப் வண்டி நான்கு வருட காலமாக டீசல் பம்பியில் ஏற்பட்ட சிக்கலொன்றில் காரணமாகவும் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாக்கியிருந்தது.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நகர அலங்காரம் மற்றும் சபைக்கு வருமானத்தினை பெற்றுக் கொள்ளும் நோக்கல் பிரதேச சபையினால் அறிவித்தலின் பிரச்சாரத்திற்காக LED அறிவித்தல் பலகையொன்றை பொருத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 938,000 தொகை 2014 மார்ச் 10 ஆந் திகதி செலவிடப்பட்டிருந்தது. இந்த அறிவித்தலை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்த வேண்டிய ஒளிர்வின் அளவு மற்றும் விளம்பரப்படுத்தக்கூடிய அறிவித்தலின் அளவு தொடர்பில் கவனம் செலுத்தாது செயற்பட்டமையால் 2014 மார்ச் 17 ஆந் திகதி முதல் செயலிழந்து காணப்பட்டது. இதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமொன்றாகியிருந்தது.

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 ஒப்பந்த நிர்வாகம்

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அலுவலகத்திற்காக இருமாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 27,709,341 (வரியற்ற) பெறுமதிக்கு 06 மாத காலப்பகுதியினுள் நிர்மாணங்களை நிறைவு செய்யும் அடிப்படையில் 2012 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தின் அமைப்புக்குறிப்புக்களுக்கமைய யன்னல் மற்றும் கதவுகள் நிர்மாணிக்கப்பட்டிராததுடன், அதற்காக ரூபா 1,842,680 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், யன்னல்களில் கிறீல் இடுவதற்காக மதிப்பீட்டின் ரூபா 630,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவின் பிரகாரம் (2007 இல் 13 மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தப்பட்ட அதிகாரச்சட்டங்களினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைவாக) ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 30,065,945 தொகைக்குரிய கைத்தொழில் சான்றுப்படுத்தல்

நிதிய குத்தகையான (CIGFL) ரூபா 75,165 இனை நிறுத்தி வைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமான கட்டிடத்தின் கூரையை உரிய முறையில் மூடாமையினால் கட்டிடத்தினுள் மழை நாட்களில் நீர் உட்புகுந்தமையால் கட்டிடத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளல் சிரமத்திற்குள்ளாகியிருந்தது. அவ்வாற மலசலக்கூட கட்டமைப்பில் நீர்க்கசிவு ஏற்பட்டமையால் அதனை பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. மேற்படி குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது ரூபா 1,385,407 ஆன பிடிகாசு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் லிங்கபுரம் பிரதேசத்தின் மக்களுக்காக புதிய வாசிகசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 5,613,650 ஆன உடன்படிக்கை பெறுமதிக்கு 2016 யூலை 18 அந் திகதி ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கட்டிடத்தினுள் தரைக்கு சீமெந்து இடுவதற்காக தயார் செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய நியமமொன்றில்லாது மேற்கொண்டமையால் அந்த தரையில் சீமெந்து சில இடங்களில் வெடிப்பிற்குள்ளாகியிருந்தது. அதனை திருத்துவதற்கு மற்றும் நூலகத்திற்கு தேவையான மின்சாரம் மற்றும் நீரினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தத்தின் பணிகளை நிறைவு செய்யாது 2016 நவம்பர் 14 ஆந் திகதியளவில் சபைக்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும், பணி முடிவுறுத்தல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. 2017 மார்ச் 15 ஆந் திகதியாகும். அதற்கமைய தாமதமாகிய 04 மாத காலத்திற்கான தாமதக் கட்டணமான ரூபா 336,819 ஆன தொகை குறைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நூலக பணிகளை ஆரம்பிப்பதற்கு 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் சேருநுவர பேரூந்து நிலையத்தின் முன்புறம் 02 கடைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,563,767 பெறுமதியான ஒப்பந்தமொன்று சமூக அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்டது. அதன் மதிப்பீட்டிற்கமைய யன்னல்களை தயாரிக்கும் போதும் கீறீல் கதவுகள் மற்றும் மின்குழில்களை பொருத்துதல் இடம்பெற வேண்டிய போதிலும், குறித்த பணிகள் 2017 மே 09 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், இதன் தரைக்கு இடப்பட்டுள்ள சீமெந்து மற்றும் சுவர்கள் பல்வேறு இடங்களில் வெடிப்புற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 நிதியேற்பாட்டின் கீழ் லிங்கபுரம் பிரதேச சபை உப அலுவலகங்களின் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 1,439,931 பெறுமதியான ஒப்பந்ததொன்று சமூக அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்ட போதிலும், சமூக அமைப்பினால் ரூபா 54,100 பெறுமதியான பணிகளான நீர் விநியோகத்தினை பெற்றுக் கொள்ளல் மற்றும் 09 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் யன்னலொன்றை பொருத்துதல் மற்றும் லீட்டர் 1000 நீர்த்தாங்கியொன்யை பொருத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறெனினும், சபையினால் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சான்றுப்படுத்தி கொடுப்பனவுகளுக்காக பட்டியல்கள் உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறே உப அலுவலகங்களின் பழுதுபார்த்தல் பணிகள் 2017 திசெம்பர் 26 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், அலுவலக பணிகள் 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2017 நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 1,489,383 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த சேருவில பிரஜா பூமி வாகனத்தரிப்பிடத்தில் பொது

மலசலகூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் பணிகள் 2017 திசெம்பர் 04 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் சபையினால் அதனை கேள்வி அறிவிப்பு விடுப்பதற்கு அல்லது சபையின் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி பராமரிப்பின்றி வருமானம் ஈட்டல் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையால் 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஊ) 2013 யூலை 26 ஆந் திகதிய FC/3/3/2013 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு மூலம் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சமூக அடிப்படைஅமைப்புக்களுக்காக வழங்கப்படக்கூடிய ஒப்பந்தப் பெறுமதியானது ரூபா 2,000,000 ஆகும். எவ்வாறெனினும், சபையினால் 03 சமூக அமைப்புக்களுக்கு அந்த பெறுமதியை மிகைத்து ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(எ) சபை நிதியத்தின் கீழான நிர்மாணங்களுக்காக மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,982,371 ஆன 10 ஒப்பந்த உடன்படிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உரிய ஒப்பந்தத்தின் பணிகள் 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | | **குறைபாடுகள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | :- | கணக்குவைத்தல், பயன்பாட்டு பேரேடுகளை பேணிச்செல்லல். |
| (ஆ) | வருமானங்களை அறவிடல் | :- | நிலுவை வருமானங்களை அறவிடல், வருமானப் பதிவேடுகளை பேணிசெல்லல். |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | :- | சொத்துக்கள் பதிவேடொன்றினை பேணிச்செல்லல். |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | :- | ஒப்பந்த குத்தகை பணத்தை செலுத்தல், உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றல். |
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | :- | ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |